# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 28.11.2023 | supeedsam.com | supeedsam@gmail.com


# வட, கிழக்கில் தடைகளுக்கு மத்தியில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் தின நிகழ்வுகள்





மாவீரர் நாளான நேற்று அகிம்சை வழியில் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாகதீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் உள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திலேயே ஈகை சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் க.சதீஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு சுடரேற்றி அகவணக்கம் செலுத்தி அஞ்சலி செலுத்தினர். இதன் போது மாவீரர்களுக்கு அகவணக்கம் செலுத்தி தீபமேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் - கோப்பாய் மாவீரர் துயிலுமில்லம் முன்பாக வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சிவாஜிலிங்கம் தலைமையிலான குழுவினர் சுடரேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## மாவீரர் நாளில் பிரபாகரனின் மகள் துவாரகா என கூறும் பெண்ணின் உரை




மாவீரர் நாளான நேற்று விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் மகள் துவாரக என குறிப்பிடும் பெண் ஒருவர் ஆற்றியுள்ள கொள்கைப் பிரகடன உரை சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ளது.

மாவீரர் நாளில் பிரபாகரனின் மகள் துவாரகா, யூ டியூப் காணொளி ஊடாக கொள்கைப் பிரகடன உரையாற்றுவார் என சமூக ஊடகங்களின் வழி தகவல்கள் வெளியாகியிருந்தன.

02 ஆம் பக்கத்தில்...

## மாவடிமுன்மாரி துயிலும் இல்லத்தில் போலிஸார் இடையூறு!



இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில்நேற்றைய தினம் மாவீரர் நினைவு நாள் உணர்வுப்பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது.

அந்த வகையில், பொலிஸாரின் பல தடைகளையும் மீறி கொட்டும் மழையிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர் தின

02 ஆம் பக்கத்தில்...

## வீதியோரத்தில் சிவப்பு மஞ்சள் கொடிகளை அகற்றிய போலிசார்

முல்லைத்தீவு மாவட்டத்தின் அளம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் வீதி ஓரத்திலே கட்டப்பட்டிருந்த சிவப்பு மஞ்சள் கொடிகளை பொலிசார் அகற்றிய நிலையில் அங்குள்ள மக்கள் ஆத்திரமடைந்து பொலிசாருடன் முரண்பாட்டில் ஈடுபட்டனர்

துயிலும் இல்ல காணியானது, யுத்தம் நிறைவடைந்த பின்னர் இராணுவத்தின் 24 வது எஸ் எல் என் ஜி படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த துயிலும் இல்லத்தில் மக்கள் நிம்மதியாக அஞ்சலி செலுத்த முடியாத நிலையில்

02 ஆம் பக்கத்தில்...



## மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் 4 பேர் போலிசாரினால் கைது



( க.ருத்திரன்)

மட்டக்களப்பு கிரான் தரவை மாவீரர் துயிலும் இல்ல செயற்பாட்டுக் குழுவின் உறுப்பினரான நிதர்சன் உட்பட 4 பேர் நேற்று மாலை (27) பொலிசாரினால் கைது செய்யப்பட்டு

02 ஆம் பக்கத்தில்...

## நியூசிலாந்தில் 2023 இன் முதல் மாவீரர் நாள் நிகழ்வு.

நியூசிலாந்தில் முதலில் தொடங்கிய மாவீரர் நாள் நிகழ்வில், நியூசிலாந்தில் வாழ்பவர்களின் உறவுகளான மாவீரர்களின் துயிலரங்கம், மண்டபத்தின் வெளியில் அமைக்கப்பட்டு மதிக்கப்படுகின்றமை, இந் நிகழ்வின் சிறப்பம்சமாகும்.

இந்த நிகழ்வில் நியூசிலாந்தின் முக்கிய அரசியற் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

நியூசிலாந்து தமிழர் ஒருங்கிணைப்புக் குழு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.






"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt
CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302

Fachmann für versicherung & vorsorge
Hauptstrasse 54
6015 Luzern
Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma :34598 | 25605: cicero



MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Französisch, Englisch, Gymi Prüfung
BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen

# செந்தில் தொண்டமானை நேரில் சென்று வரவேற்ற தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் கோர்ன் டபரன்சி!



(ஹஸ்பர்)

தாய்லாந்துக்கு உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள கிழக்கு மாகாண ஆளுநரும்,இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமானை அந்நாட்டின் முன்னாள் பிரதமர் கோர்ன் டபரன்சியை மரியாதை, நட்பு ரீதியாகவும் நேரில் சென்று வரவேற்றதுடன், இரு நாட்டு நட்புறவை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடப்பட்டது.

மேலும் இலங்கை பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீண்டெழ தாய்லாந்து முழு ஆதரவையும் வழங்கும் என கொர்ன் டபரன்சி கிழக்கு மாகாண ஆளுநரிடம் உறுதியளித்தார். தாய்லாந்தில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் போது அந்நாட்டை மீட்டெடுக்க சுற்றுலா துறை முக்கிய பங்களித்தது என முன்னாள் பிரமர் கொர்ன் டபரன்சி தெரிவித்ததோடு, தாய்லாந்தில் சுற்றுலா துறையில் காணப்படும் வெற்றிக்கான கொள்கை குறித்து முன்னாள் பிரமர் விளக்கம் அளித்தார்.

ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு தனக்கும் காணப்படும் நீண்ட கால நட்பு குறித்து நினைவூட்டப்பட்டதுடன்,முன்னாள் பிரமர் கொர்ன் டபரன்சி இலங்கைக்கு வருகை தருமாறு செந்தில் தொண்டமான் அழைப்பு விடுத்தார். அவ்வழைப்பை ஏற்று எதிர்வரும் பெப்ரவரி மாதம் இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொள்வதாக முன்னாள் பிரதமர் கொர்ன் டபரன்சி ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் உறுதியளித்தார்.

## வீதியோரத்தில் சிவப்பு மஞ்சள் கொடிகளை ...

இருந்து வருகின்றனர்.

இவ்வாறான பின்னணியில் துயிலுமில்ல காணியிலிருந்து இராணுவத்தினரை வெளியேறுமாறு மக்கள் கோரி வருகின்ற நிலையில் இராணுவத்தினர் வெளியேறாத நிலையில் வீதி ஓரத்திலேயே மக்கள் சுடரேற்றி அஞ்சலி செலுத்தி வருகின்றார்கள்.

துயிலும் இல்ல காணியானது தனியார் காணியாக காணப்படுகின்ற நிலையில் இராணுவ ஆக்கிரமிப்பில் இல்லாதிருந்த ஒரு பகுதி காணியை தனிநபர் ஒருவர் காணி உரிமையாளரிடருந்து பெற்று வர்த்தக நிலையமொன்றை அமைத்து நடாத்தி வருகிறார் இதற்கும் மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு வெளியிட்டு வருவதோடு துயிலுமில்ல காணியில் இருந்து இராணுவம் மற்றும் வர்த்தக நிலையம் அமைத்த தனிநபர் ஆகியோர் வெளியேறி காணியை துயிலுமில்லத்துக்கு வழங்குமாறு கோரி போராடிவருகின்றனர்.

இவ்வாறான நிலையில் இம்முறை 2023 தமிழ் தேசிய மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகளை செய்தபோது இந்த வர்த்தக நிலையத்திற்கு முன்பாக கொடிகளை கட்டி விளக்குகளை வைக்க வேண்டாம் என ஏற்பாட்டாளர்களுடன் வர்த்தக நிலைய உரிமையாளர் முரண்பட்ட நிலையில் பணிக்குழுவினருக்கும் கடை உரிமையாளருக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டு கைகலப்பாக மாறியது.

இதன் அடிப்படையில் தருணம் பார்த்திருந்த பொலிசார் அங்கு வருகை தந்து இரண்டு தரப்பினை சேர்ந்தவர்களிலும் சிலரை பொலிஸ் நிலையம் அழைத்து வந்ததோடு அந்த இடத்தில் இருந்த சிவப்பு மஞ்சள் கொடிகளை பொலிசார் அகற்றியுள்ளனர் இதனால் ஆத்திரமடைந்த மக்கள் பொலிசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

மாவீரர் தின நிகழ்வுகளை குழப்புவதற்கு தருணம் பார்த்திருந்த பொலிசார் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்த அலங்காரத்தை சிதைத்து மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளனர் குறிப்பாக இந்த தனி நபர் மீதும் அங்குள்ள மக்கள் தங்களது கோபத்தை வெளியிடுகின்றனர். தங்களுடைய மக்களின் உரிமைக்காக போராடிய இந்த மாவீரர்களை வழிபடுவதை தடுப்பதற்கு இவ்வாறான எம்மவர்களும் துணை போகின்ற செயற்பாடுகளுக்கு அவர்கள் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் பொலிஸ் நிலையம் அழைத்து வரப்பட்டவர்களில் அளம்பில் மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவை சேர்ந்த ஒருவர் கடை உரிமையாளர் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு பொலிசார் தெரிவித்தனர்.

## மாவடிமுன்மாரி துயிலும் இல்லத்தில்....

நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவடிமுன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் பொலிஸாரின் பல்வேறு தடைகளுக்கும் மத்தியில் மாவீரர் தின நிகழ்வு ஆயிரக்கணக்கான மக்களின் முன்னிலையில் உணர்வூபூர்வமாக நடைபெற்றது.

மழைக்கும் மத்தியிலும் மாவீரரின் தாய் ஒருவர் பிரதான ஈகச்சுடர் ஏற்ற ஏனையவர்கள் ஈகச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தினார்கள். இந்த நிகழ்வில் பெருமளவான மக்கள் கொட்டும் மழைக்கும் மத்தியில் மக்கள் சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தினார்கள்.

இதன்போது அஞ்சலி செலுத்தும் இடத்திற்குள் சப்பாத்துக் கால்களுடன் பொலிஸார் நுழைந்து, நிகழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தியதுடன் அதற்கு கடுமையான எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

நினைவேந்தல் பகுதிக்கு பொலிஸார் சப்பாத்துக் கால்களுடன் நுழைந்தமை தொடர்ந்து அங்கிருந்த மதத்தலைவர்கள், மாவீரர்களின் பெற்றோர் உறவினர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்ததுடன், அங்கு ஒருவித பதற்றம் நிலவியது.

## மட்டக்களப்பு தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் 4 பேர்...

விசாரணைக்காக வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

நினைவேந்தல் நிகழ்விற்காக ஈகைச் சுடர் ஏற்றுவதற்காக மாவீரர்களின் உறவுகள் காத்திருந்த வேளை இச்சம்பவம் இடம்பெற்றது.

திடிரென உள் நுழைந்த பொலிசார் நினைவேந்தல் நிகழ்வினை நடாத்துவதற்கு இடையூறு ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் அங்கு அலங்கரிக்கப்பட்ட கொடிகளை அகற்றுவதற்கும் நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதனை கண்டித்து அங்கு சமூகமளித்திருந்த பாராளுமன்ற உறுப்பினர்களான இரா.சாணக்கியன் மற்றும் செல்வராஜா கஜேந்திரன் ஆகியோர்கள் பொலிசாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். ஈகை சுடரேற்றுவதற்கு 5 நிமிடமாவது தாருங்கள் என கெஞ்சிக்கேட்டும் நேரம் வழங்காமல் திடீர் செயற்பாட்டில் ஈடுபட்டனர்.

வழமை போன்று கிரான் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் உயிர்நீத்த தமது உறவுகளை நினைவு கூறும் முகமாகவும் ஈகைச் சுடரேற்றி நினைவேந்தலை மேற்கொள்ளும் முகமாக குறித்த நேரமான மாலை 6.05 நிமிடம் வரை காத்திருந்தனர்.இதன்போது கலகம் அடக்கும் பொலிசாருடன் உள் நுழைந்த பொலிஸ் உயர் அதிகாரிகள் நினைவேந்தல் நடாத்துவதற்கு தடை ஏற்படுத்தியதுடன் அங்கு அலங்கரிக்கப்பட்ட சிகப்பு,மஞ்சள் நிற கொடிகளை அகற்றினர்கள்.அத்துடன் ஒலி பெருக்கி சாதனங்கள் மற்றும் ஏனைய பொருட்களையும் கைப்பற்றி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.குறித்த பொலிசாரின் செயற்பாடு இடம்பெறும் போது மாவீரர்களின் உறவுகள் ஈகைச் சுடரை அச்சத்துடன் விரைவாக ஏற்றிவிட்டு அங்கிருந்து விலகிச் சென்றனர்.இச் சம்பவமானது பிரதேசத்தில் அசாதாரண சூழ் நிலையை ஏற்படுத்தியதுடன் மக்களிடையே பதற்றத்தையும் ஏற்படுத்தியிருந்தது.நிகழ்வு நடைபெற்ற பிரதேசத்தில் அதிகளவு பொலிசார்,இராணுவத்தினர் மற்றும் இராணுவ கவச வாகனங்கள் என்பன கைதிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் என்பன முன்னெச்சரிக்கையாக தயாரான நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

## மாவீரர் நாளில் பிரபாகரனின்

அந்த அறிவிப்பின்படி, குறிப்பிட்ட நேரத்தில் யூ டியூப் காணொளி ஊடாக பிரபாகரன் மகள் துவாரகா எனக் குறிப்பிடப்பட்ட பெண்மணி உரையாற்றியுள்ளார்.

சுமார் பத்து நிமிடங்கள் வரை நீடித்துள்ள இந்த காணொளி தற்போது சமூக ஊடகங்கள் மிகவும் வைரலாகியுள்ளது.

இந்த காணொளி குறித்த செய்திகளுக்கு இந்திய ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

உலகத் தமிழ் உறவுகளுக்கு நன்றி

"இலங்கைப் படையினர் தோல்வியுறும் தருணங்களில் எல்லாம் பிற நாடுகளின், சக்தி வாய்ந்த நாடுகள் தலையிட்டு இலங்கைக்கு உதவின. இதன் தொடர்ச்சியாக, புலிகள் இயக்கத்திற்கு நாடுகள் தடை விதித்தன.

சுதந்திரத்துக்கான போராட்டம் முற்றுப்பெறவில்லை. புறநிலைச் சூழல்கள் அனைத்தும் அப்படியேதான் இருக்கின்றன. பண்பாட்டுச் சீரழிவுகள் ஊக்கப்படுத்தப்படுகின்றன. சகலமும் சிங்களமயமாக்கப்படுகின்றன.

அனைத்து சுதந்திரங்களும் பறிக்கப்படுகின்றன. மனித உரிமைகள் மறுக்கப்படுகின்றன. எம் மக்கள் குரல்வளை நசுக்கப்பட்டவர்களாக வாழ்கிறார்கள்.

மது பிரச்சினையில் தலையிட்ட சக்தி வாய்ந்த நாடுகள் அரசியல் தீர்வை வழங்கவில்லை. ஐ.நா. போன்ற அமைப்புகளும் நீதியைப் பெற்றுத் தரவில்லை.

ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்திருந்தாலும் அரசியல் போராட்டம் உயிர்ப்போடு இருப்பதற்கு இதுவே காரணம். சுதந்திரத்துக்கான எமது போராட்டம் தொடர்ந்து வருகிறது.

நாம் அரசியல் போராட்டத்தை முன்னெடுத்து, அரசியல் உரிமைகளை வென்றெடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். என உரை நிகழ்த்தினார். தாயக் தமிழக உறவுகளுக்கும் அரசியல் தலைவர்களுக்கும் உலகத் தமிழ் உறவுகளுக்கும் நன்றி தெரிவித்த அவர், அனைவரும் ஒருதுணையாக நின்று குரல் கொடுப்பார்கள் என்றும் குறித்த காணொளியில் தோன்றிய பெண் தெரிவித்துள்ளார்.

பழ.நெடுமாறனின் சர்ச்சைப் பேச்சு

இதேவேளை, விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருப்பதாகவும், அவர் விரைவில் பொது வெளியில் தோன்றுவார் எனவும் தமிழகத்தின் பழ.நெடுமாறன் குறிப்பிட்டிருந்தார்.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில், இலங்கை அரசாங்கம் அதற்கு கடுமையான மறுப்பு தெரிவித்திருந்தது.

இவ்வாறான நிலையில், மாவீரர் நாளில் பிரபாகரனின் மகள் பொது வெளியில் தோன்றுவார் என அண்மை நாட்களில் சமூக ஊடகங்களில் தகவல் வெளியாகியிருந்த பின்னணியில் தற்போது இந்த காணொளி வெளியாகியுள்ளது.

இந்த காணொளியில் ஊடாக பேசியது பிரபாகரனின் மகள் துவாரகா தானா என்பது இதுவரையில் உறுதிப்படுத்தவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அஜ தொழில்நுட்பத்தின் மூலம் முயற்சி

எவ்வாறாயினும், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலம் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகள் துவாரகா இன்னும் உயிருடன் இருக்கிறார் என காண்பிப்பதற்கான காணொளியொன்றை வெளியிடுவதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாக வெளிநாட்டு புலனாய்வு அமைப்புகள் இலங்கைப் புலனாய்வு பிரிவுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தன.

மாவீரர் தினத்தை முன்னிட்டு இந்த காணொளியை வெளியிடுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் இதற்காக பிரபாகரனின் உறவினர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த காணொளியை பயன்படுத்தி நோர்வேயில் உள்ள விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்புக்கு நிதியை திரட்ட திட்டமிட்டிருப்பதாகவும் இலங்கை புலனாய்வுப் பிரிவுக்கு சர்வதேச புலனாய்வு அமைப்புகள் எச்சரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் மகள் துவாரகா என போலியாக ஒருநபரை அடையாளம் காட்டி நிதி வசூல் நடைபெறுவதாக பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் குற்றம் சாட்டியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வட, கிழக்கில் தடைகளுக்கு மத்தியில் உணர்வெழுச்சிச்சியுடன் மாவீரர் தின நிகழ்வுகள்

மாவீரர் நாளான இன்றைய தினம் திங்கட்கிழமை மாவீரர்கள் நினைவாக சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

கோப்பாய் துயிலும் இல்லம் இராணுவத்தினரால் இடித்தது அழிக்கப்பட்டு , தற்போது இராணுவத்தினரின் 51ஆவது படைப்பிரிவின் தலைமையகம் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

மட்டக்களப்பில் மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவேந்தல் செய்ய நீதிமன்றம் அனுமதி

மட்டக்களப்பு மாவடிமுன்மாரி, தாண்டியடி, தரவை மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவேந்;தல் நினைவேந்தல் செய்வதற்கு அனுமதியளித்ததுடன் தடைசெய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் சின்னங்கள் கொடிகள் படங்கள் பயன்படுத்த கூடாது இன்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மாவட்டத்திலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் இன்று நினைவேந்தல் செய்வதை தடைசெய்ய கோரி வாழைச்சேனை, வவுணதீவு, சந்திவெளி, கொக்கட்டிச்சோலை, வாகரை, பொலிஸார் இன்று முன்னாள் நா.உறுப்பினர்கள் மற்றும் தமிழ் கட்சிகளின் செயற்பாட்டாளர்கள் உட்பட ஒவ்வொரு



பொலிஸ் நிலையமும் தலா 20 பேருக்கு எதிராக மட்டக்களப்பு , வாழைச்சேனை, நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றிருந்தனர்

இந்த நிலையில், இந்த தடை உத்தரவுக்கு எதிராக இன்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் தமிழ்தேசிய மக்கள் முன்னணி நா.உறுப்பினர் எஸ்.கஜேந்திரன், கட்சி தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், மற்றும் முன்



னாள் நாடாளுமன்ற உறுப்பின்களான ஞா.சிறிநேசன், பா.அரியேந்திரன் உட்படவர்கள் சிரேஸ்;ட சட்டத்தரணி பிறேம்நாத், விஜயகுமார் உட்பட 7 சட்டத்தரணிகள் மூலம் நீதிமன்றில் முன்நகர்வு பத்திரம் விண்ணப்பித்தனர்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதவான் இறந்தவர்களுக்கு நினைவேந்தல் செய்ய உரிமையுண்டு எனவும் குறித்த மாவீரர் துயிலும் இல்லங்களில் மக்கள் சுயமாக நினைவேந்தலை அனுஸ்டிக்க முடியும் எனவும் அதற்கு அனுமதியளித்ததுடன் தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகளின் சின்னங்கள்,கொடிகள், புகைப்படங்கள் பயன்படுத்த கூடாது எனவும் உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

எனவே மக்கள் மாவீரர் துயிலும் இல்லங்களுக்கு வருகை தந்து நினைவேந்தலில் அலை அலையாக திரண்டு ஈடுபடுமாறு தமிழ்தேசிய மக்கள் முன்னணி நா.உறுப்பினர் எஸ்.கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பின்களான ஞா.சிறிநேசன், பா.அரியேந்திரன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மூன்று நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நிராகரிப்பு

மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடை கோரி யாழ்ப்பாணத்தில் உள்ள நீதவான் நீதிமன்றங்களில் பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மற்றும் கோப்பாய் பொலிஸாரினால் யாழ்.நீதவான் நீதிமன்றிலும் , வல்வெட்டித்துறை , பருத்தித்துறை மற்றும் நெல்லியடி பொலிஸாரினால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றிலும் , ஊர்காவற்துறை பொலிஸாரினால் ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றிலும் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பில் இன்றைய தினம் திங்கட்கிழமை நடைபெற்ற விசாரணைகளை அடுத்து , அந்த அந்த நீதிமன்றங்களினால் மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை சுன்னாகம் , அச்சுவேலி மற்றும் தெல்லிப்பளை பொலிஸாரினால் மல்லாகம் நீதவான் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் கடந்த வாரம் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சுற்றுவட்டப் பாதையில் மாவீரர் நாள் பதாகையொன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

எம் மாவீரர்களின் தியாக வரலாறு வீண் போக கூடாது. ஆகவே விழித்தெழு இளம் தலைமுறையே .. போதை வஸ்துக்களில் இருந்தும், வன்முறை சமூகத்தில் இருந்தும் விழித்தெழுந்து, அறிவாயுதத்தை பயன்படுத்து என பதாகை ஒன்று காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.



யாழ்.இந்துக்கல்லூரிக்கு அருகில் உள்ள சுற்றுவட்ட பாதையில் மாவீரர் நாள் என பதாகை கட்டப்பட்டு சிவப்பு மஞ்சள் கொடியுடன் மேலும் சில பதாகைகள் வைக்கப்பட்டுள்ளன.

யுத்தத்தில் உயிர் நீத்தவர்களை நினைவு கூர்ந்து மன்னார் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட திருப்பலி

யுத்தத்தில் உயிர் நீத்தவர்களை நினைவு கூறும் முகமாக மன்னார் பேசாலை மக்களின் ஏற்பாட்டில் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்தில் நேற்று திங்கட்கிழமை (27) காலை விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

-அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார் தலைமையில் குறித்த இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதன் போது யுத்தத்தில் உயிர் நீத்தவர்களை நினைவு கூர்ந்து தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம் வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக மாவீரர் நாளாறு உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் இராணுவ கட்டுப்பாட்டில் இருக்கும் நிலையில் துயிலும் இல்லத்திற்கு அருகில் உள்ள காணி ஒன்றில் அஞ்சலி நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

பிரதான ஈகைச் சுடரினை கடற்கரும்புலி மாவீரர் தமிழினியின் தந்தையார் முத்துலிங்கம் சிவப்பிரகாசம் ஏற்றிவைத்தார்.

அதனை தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர்கள், நண்பர்கள் என பலரும் கலந்துகொண்டு போரில் உயிர் நீர்த்த ஏனையவர்களுக்கு சுடரேற்றி மலர் தூவி கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.

ஈச்சங்குளத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் தினம்

வவுனியா ஈச்சங்குளத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர் தினநிகழ்வு இன்று மாலை இடம்பெற்றது.

இதன்போது பிரதான ஈகைச்சுடரினை மாவீரர்களான உமாசங்கர் மற்றும் கலைச்செல்வி ஆகியோரின் தாயாரான வள்ளிப்பிள்ளையினால் ஏற்றி வைக்கப்பட்டது.

ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள நிலையில் அதற்கு அருகாமையில் உள்ள மைதானத்தில் குறித்த மாவீரர்தின நிகழ்வு அனுஸ்டிக்கப்பட்டது.

இதன்போது ஆயிரணக்கணக்கான பொது மக்கள் கலந்துகொண்டு தமது உறவுகளுக்கு அஞ்சலியினை செலுத்திருந்தனர்.

யாழ்ப்பாணம், சாட்டி துயிலும் இல்லத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், தீவகம் சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள், சாட்டி மாதா தேவாலயத்தில் இருந்து நடைபவனியாக துயிலும் இல்லத்துக்கு வந்து அஞ்சலி செலுத்தினர்.

பொது ஈகைச்சுடர் முன்னாள் போராளியும், இரண்டு மாவீரர்களின் தந்தையுமான வி.கந்தசுவாமியினால் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மாவீரர்களுக்கு சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதன்போது மாவீரர்களின் பெற்றோர், உறவினர்கள், முன்னாள் போராளிகள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

கண்ணீரில் நனைந்தது நல்லூர் மண்!! தியாக தீபம் திலீபனுக்கு முன்னால் மாவீரர்களுக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம் நல்லூரில், தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவு மண்டபத்தில், உணர்வெழுச்சியுடன் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவீரர் நாளான இன்றைய தினம் நாடு முழுவதும் குறிப்பாக வடக்கு கிழக்கில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகின்றது.

இதனையொட்டி யாழ்ப்பாணம் நல்லூரில், தியாக தீபம் திலீபனின் நினைவிடத்திற்கு முன் மாவீரர் நாளான இன்று அஞ்சலி செலுத்தப்படுகின்றது.

மாவீரர்களின் பெற்றோர்கள், சகோதரர்கள், உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டு தாயக விடுதலைக்காக உயிர் நீர்த்த மாவீரர்களுக்கு சுடரேற்றி கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தினர்.



# அடக்கு முறைக்கு எதிராக மக்கள் வீறு கொண்டு எழுவார்கள்

## ரெலோ தலைவரும் நா.உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவிப்பு

(கனகராசா சரவணன்)

இந்த சிங்கள தேசத்தின் அடக்கு முறைக்கு எதிராக தான் ஆயுத போராட்டம் தொடங்கியது இந்த அடக்குமுறை நெருக்குதல்களை கொடுக்கின்ற போது அடக்கு முறைக்கு எதிராக மக்கள் வீறு கொண்டு எழுவார்கள் இப்போது போர்துப்பாக்கி சத்தங்கள் இல்லையே ஒழிய அதேபோல் சூழலில் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் எனவே மண்ணுக்காக உயிர்தியாகம் செய்கின்ற அத்தனைபேருக்கும் நாங்கள் செய்கின்ற கைமாறு அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது என நா. உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்



மட்டக்களப்பிலுள்ள நா.உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் காரியாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (26) ரோலே கட்சியின் 11 தேசிய மாநாடு பற்றிய கட்சி உறுப்பினரளுக்கிடையு இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த அடக்குமுறை தொடர்ச்சிய இருந்துவருகின்றது இப்போது எங்களுடைய மக்கள் பட்டினிசாவை எதிர் நோக்கியுள்ள சூழலிலேஇப்போது நடைபெறுகின்ற நிலங்களாக இருக்கட்டும் இப்படி ஒட்டுமொத்த பல திணைக்களங்களை வைத்துக் கொண்டு எங்களுடை தேசத்தில் புத்தகோயில்களை கட்டுவதும் பறவைகள் சரணாலயம் அமைக்க நிலங்களை அபகிப்பதும்

தென்னிலங்கையில் இருந்து எங்கள் பகுதியிலுள்ள கடலிலே வருகின்ற மீனவர்கள் சட்டத்துக்கு புறம்பான வலைகளை கொண்டுவந்து மிக மோசமான செயல்பாடுகளி செய்து வருகின்றனர் இவ்வாறு ஒவ்வொரு விடையத்திலும் எங்களுடைய பிரதேசம் பறி போகின்றது.

அடக்குமுறை என்பது நாங்கள் எதிர்பார்த்தது அந்தவகையில் எங்களுடைய மக்கள் நிச்சயமாக கிழந்தொழுவார்கள் நகுலேஸ் கைது செய்யப்பட்டார் அவர் செய்த தவறு என்னடிவன்று பார்க்கின்றபோது மாவீரர் பெற்றோரை கௌரவித்தது தான் அவர் செய்த தவறு பயங்கரவாத தடைச்சட்டத்தில் அவரை கைது செய்து ஏற்று; கொள்ள முடியாது இதனை கண்டிக்கின்றோம்.

அந்த அடிப்படையில் நாளை நடைபெறுகின்ற மாவீரர் தின நினைவேந்தல் பயங்கரவாத தடைச்சட்டத்தில் அடக்க நினைக்கின்றனர் நாங்கள் இதை எதிர்;பார்கவேண்டும் ஆனால் பின்நோக்கி போக முடியாது மக்கள் கிழந்தொழுவார்கள் அதற்கான ஆதரவு செயற்பாட்டை நாங்கள் செய்வோம். போர் முடிந்துவிட்டது சகல விடையங்களை செய்யமுடியும் என எதிர்பார்க்கமுடியாது போர்துப்பாக்கி சத்தங்கள் இல்லையே ஒழிய அதேபோல் சூழலில் மக்கள் வாழ்ந்துவருகின்றனர் ஆகவே இதனை எதிர்பார்த்து எதிர்த்து செயற்படுகின்ற மண்ணுக்காக உயிர்தியாகம் செய்கின்ற அத்தனைபேருக்கும் நாங்கள் செய்கின்ற கைமாறு அவர்களுக்கு அஞ்சலி செலுத்துவது ஆகவே இந்த விடையத்தில் நாங்கள் பின்னோக்கி போக முடியாது என்றார்

# ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் நடாத்திவரும் 75வது ஊடகச் செயலமர்வு






(அஷ்ரப் ஏ சமத்

ஸ்ரீலங்காமுஸ்லிம் மீடியாபோரம் நடாத்திவரும் 75வது ஊடகச் செயலமர்வும் 21ஆம் நூற்றாண்டில் இலத்திரனியவியல் மற்றும் சமூக ஊடகங்கள் எனும் தலைப்பில் 25.11.2023 கொழும்பு 12 பாத்திமா முஸ்லிம் மகளிர்கல்லூரியில் காலை 08.00 - 05.00 பி.ப வரை நடைபெற்றது இந் நிகழ்வு ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம் அமீன், மற்றும் கொழும்பு பாத்திமா முஸ்லிம் மகளிர் கல்லூரியின் அதிபர் எம்.எச். மும்தாஜ் பேகம் ஆகியோர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ் ஊடக செயலமர்வு கல்லூரியின் அபிவிருத்தி சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. கல்லூாியின் மாணவத் தலைவிகள், மற்றும் சிரேஸ்ட மாணவிகள் 160 பேர் கலந்து கொண்டார்கள்

இச்செயலமர்வில் பிரபல ஊடக நிறுவனங்களின் முகாமையாளர்கள் சிரேஷ்ட ஊடகவியலாளர்களை விரிவுரைகளையும் செயற்பட்டு பயிற்சிகளையும் நிகழ்த்தினார்கள்.

சிரேஷ்ட ஊடகவியலாளர் ஜீவா சதாசிவம், செய்தி அறிக்கையிடல் மற்றும் ஏ.ஆர்.ஏ லோசன் சிரேஷ்ட ஒலிபரப்பாளர், வானொலியில் எவ்வாறு செய்தி அறிக்கையிடுதல் மற்றும் செய்தி வாசிப்பு , சக்தி தொலைக்காட்சியின் செய்தி முகாமையாளர் ஜிப்ரி ஜெபதர்சனின் தொலைக்காட்சி செய்தியறிக்கையிடுதல் மற்றும் குரல் பயிற்சிகள் , சிகார் அனீஸ், சிரேஷ்ட வெளிநாட்டு செய்திச் சேவை, ஊடக பயிற்சியாளர் ,

இஸ்பாஹான் சராப்டீன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் , சமுக சேவை ஊடக வலைத்தளங்களில் கைத்தொலைபேசி ஊடாக செய்தி தயாரித்தல் போன்ற தலைப்புகளில் விரிவுரைகளை நிகழ்த்தினார்கள்

பிற்பகல் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம அதிதியாக ஆதில் சத்தார் .பாக்கிஸ்தான் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஊடகம் ,கலாச்சாரம் மற்றும் கல்வி செயலாளர் மற்றும் கல்லூாியின் பிரதி ,உப அதிபர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பிணர்களும் முஸ்லிம் மீடியா போரத்தின் செயற்குழு உறுப்பிணர்களும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.

# கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் வெள்ளிவிழா வேலைத்திட்டம்!




(வீ.ரி. சகாதேவராஜா )

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழா வேலைத்திட்டம் கழகத்தின் தலைவர் பொறியியலாளர் லயன். எம்.சுதர்சன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

முதல் நிகழ்வாக, திருக்கோவில் பிரதேசத்தில் பின்தங்கிய காயத்ரி கிராமத்தில் ஐம்பது பேருக்கு 25சாறிகள் மற்றும் 25சாறன்கள் வழங்கப்பட்டன .

கல்முனை நகர லயன்ஸ் கழகத்தின் வெள்ளிவிழா தலைவர் பொறியியலாளர் லயன். எம். சுதர்சன் தலைமையில் நேற்று முன்தினம்(25) சனிக்கிழமை நடைபெற்ற இந் நிகழ்வில் திருக்கோவில் உதவி பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண சபையின் பேரவைச் செயலாளர் லயன் கலாநிதி எம். கோபாலரெத்தினம், சம்மாந்துறை வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் வீ.ரி. சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள் .

மேலும், கழக செயலாளர் லயன் எ.எல்.எம்.பாயிஸ், பொருளாளர் லயன் எம்.பரமேஸ்வரநாதன் உள்ளிட்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பொதிகளை வழங்கி வைத்தார்கள். காயத்ரி கிராமத்தின் கிராம சேவை உத்தியோகத்தர் எஸ்.சடாட்சரன் நன்றியுரை வழங்கினார்.

பின்னர் கஞ்சிகுடியாற்றில் மாதாந்த அமர்வு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சாய்ந்தமருது அல் ஹிலால் தேற்கு வீதியில் குழிகள் மக்கள் பயணிப்பதில் சிரமம்




(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது அல் ஹிலால் தெற்கு வீதியில் சின்னப் பள்ளி வீதியும் , நீர் வழங்கல் வடிகாலமைப்பு அலுவலக வீதியும் சந்திக்கும் சந்தியில் அமைந்துள்ள கொங்கிறீட் வீதி பல மாதங்களாக சேதமடைந்து குன்றும் குழியுமாக காணப்படுவதால் வீதியில் பயணிக்கும் மக்களும் வாகன சாரதிகளும் பலவிதமான அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

தற்போது இப் பிரதேசத்தில் அடைமழை பெய்து வருவதனால் வீதியிலுள்ள பாரிய குழிகளில் நீர் தேங்கி காணப்படுவதால் அடிக்கடி வீதி விபத்துக்களும் இடம்பெற்று வருகின்றன. இவ் வீதியில் சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயம் அமைந்திருப்பதால் தினசரி பாடசாலை மாணவர்களும்,ஆசிரியர்களும் பயணிப்பதால் அவர்களும் சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்துமாறு பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

# பாடசாலை பெயர்பலகை திரை நீக்கமும் நுழைவாயில் வளைவுக்கான அடிக்கல் வைக்கும் நிகழ்வும்!




(அ . அச்சுதன்)

திருகோணமலை மாவட்டம் மூதூர் வெருகலம்பதி இந்து மகா வித்தியாலயத்தில் 23.11.2023 ஆந்திகதியாகிய அன்று பாடசாலை பெயர் பலகை திரை நீக்கமும் , நுழைவாயில் வளைவுக்கான அடிக்கல் வைக்கும் நிகழ்வும் பாடசாலையின் அதிபர் சி.கமலேஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் ஜெ.ஜெனார்த்தனன் (முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர்) சி.தயாபரன்(கோட்டக் கல்விப் பணிப்பாளர்) MSM.ரமீம் (உதவிக்கல்விப் பணிப்பாளர்) ஆகிய விருந்தினர்களுடன் சமூக சங்கங்களின் பங்குபற்றுதலுடன் சிறப்பாக நடைபெற்றது.

# மூதூர் வலயத்தில் முதலாமிடம்..!



(அ . அச்சுதன்)

கல்விக்கு வறுமை தடையல்ல என்பதனை நிருபித்து காட்டிய மாணவன் மூதூர் கல்வி வலயத்துக்குட்பட்ட தி/ மூ/ ஜாயா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மாணவன் கிளிவெட்டி ஆதியம்மன் கேனி கிராமத்தில் வசிக்கும் புஸ்பாகரன் சாருஜன் எனும் மாணவன் 2023 ஆண்டு இடம் பெற்ற புலமை பரீச்சையில் 185 புள்ளிகளை பெற்று மூதூர் வலயத்தில் முதலாமிடத்தையும் திருகோணமலை மாவட்டத்தில் இரண்டாமிடத்தையும் பெற்று சாதனை புரிந்துள்ளான்

# வரலாற்றுச் சாதனை புரிந்த இந்துவின் மைந்தனுக்கு பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினரால் பாராட்டுதல்களும் பரிசில்களும்







இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தின் (குஃகுஇஅ) 13 வயதுக்குட்பட்டோருக்கான இரண்டாம் கட்ட முதல்தர போட்டியில் கொழும்பு 4 - இந்துக் கல்லூரியின் மாணவன் செல்வசேகரன் ரிஷியுதன் அபாரமாக பந்துவீசி ஓட்டங்கள் எதனையும் வழங்காது 08 விக்கெட்டுகளை வீழ்த்தி பாடசாலை மட்டத்தில் சாதனைப் படைத்து அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்தார்.

கடந்த 24ஆம் திகதி இந்துக் கல்லூரி கொழும்புமற்றும் பத்தரமுல்லை எம்.டி.எச்.ஜயவர்தன மகா வித்தியாலயத்துக்கு இடையில் நடைபெற்ற போட்டிலேயே செல்வசேகரன் ரிஷியுதன் இந்த சாதனையை நிகழ்த்தியிருந்தார், அதனைத்தொடர்ந்து பல தரப்பட்ட தரப்பினரிடமிருந்தும் பாராட்டுதல்களைப் பெற்ற சாதனை மாணவன் ரிஷியுதனின் எதிர்கால கிரிக்கெட் வளர்ச்சிக்கு வித்திடும் வகையில் இந்துக் கல்லூரி கொழும்பின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நினைவுக் கேடயமும், சம்பூர்ண கிரிக்கெட் விளையாட்டு உபகரண பொதி மற்றும் சீருடை மற்றும் காலணிகள் பெற்றுக்கொள்வதற்கான வவுச்சர்களையும் பெற்றுக் கொடுத்ததுடன் இந்நிகழ்வு சம்பந்தமாக ஊடகவியலாளர் சந்திப்பையும் கல்லூரியின் ஊடகப்பிரிவு மண்டபத்தில் நடாத்தியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த சாதனை மாணவன் செல்வசேகரன் ரிஷியுதன் ‶ எனது முழுத்திறமையையும் எவ்வாறாவது வெளிக்காட்டி எதிர்காலத்தில் இலங்கை 19 வயதிற்குட்பட்ட தேசிய அணியில் இடம் பிடிப்பதே எதிர்கால இலட்சியம் ‶ என்றார். அதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த பழைய மாணவர் சங்கத்தின் விளையாட்டுத்துறைக்கான உப தலைவர் வைத்தியர் ரஜீவ் நிர்மலசிங்கம் - கல்லூரியில் 2 வருடங்களுக்கு முன்னர் கிரிக்கெட் பயிற்சி நிலையத்தினை ஆரம்பித்து இருந்தோம் அதில் இருந்து இந்த சாதனை மாணவனை அடையாளப்படுத்தியதைப் போல அனைத்து மாணவர்களும் விளையாட்டு நிகழ்வுகளில் மிளிர வேண்டும் எனவும் விளையாட்டுத் தொடர்பான ஆர்வத்தை அதிகரிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளர் ஆர். இளங்கோவன் அவர்கள் இம்மாணவனுக்கான முழுமையான கிரிக்கெட் விளையாட்டு சாதனப் பொதியினை 1987 ஆம் ஆண்டு பழைய மாணவர்கள் வழங்கியதாகவும் மேலும் இவருக்கு முதன்மை 11வர் அணிக்கு தெரிவாகும் வரையும் சகலவிதமான விளையாட்டு உபகரணங்களையும், சலுகைகளையும் பெற்றுத் தருவதற்கு உறுதியளித்துள்ளதாகவும் தெரிவித்தார், தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில் வெளிநாடு வாழ் இந்து கல்லூரியின் பழைய மாணவர்கள் விளையாட்டு துறையில் மிளிரும் அனைத்து மாணவர்களுக்கும் உதவிகளை செய்ய ஆர்வமாக உள்ளதையும் சுட்டிக்காட்டினார். அத்தோடு இச்சாதனை மாணவனுக்கு கொழும்பு இந்துக் கல்லூரியின் பழைய மாணவரான விநாயகமூர்த்தி ஜனகனும் ஒரு வருடத்திற்கு தேவையான கற்றல் உபகரணங்களையும் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நிலநடுக்கம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு



(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்களின் அறிவுறுத்தலுக்கமைய திருகோணமலை மாவட்ட செயலகம், கிழக்கு மாகாண கல்வி அமைச்சு மற்றும் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் ஏற்பாட்டில் நிலநடுக்கம் தொடர்பானவிழிப்புணர்வு நிகழ்ச்சியானது (22) (24) ஆம் திகதிகளில் கோமரன்கடவல, மஹதியுல்வெவ, மெதவச்சிய போன்ற பாடசாலைகளில் நடைபெற்றது.

மொத்தமாக 14 பாடசாலைகளை உள்ளடக்கியதாக இவ் விழிப்புணர்வு நிகழ்வு இடம் பெற்றது. இதில் 1103 மாணவ மாணவிகளும் 68 ஆசிரியர்களும் பங்கேற்று நிலநடுக்கத்திலிருந்து தங்களை பாதுகாப்பது தொடர்பான அறிவினை பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாரச்சி அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

திருகோணமலையில் அண்மைக் காலமாக ஏற்பட்டு வருகின்ற நிலநடுக்கம் தொடர்பிலும் அதனை எதிர்கொள்ளக் கூடிய வகையில் மாணவர்கள் உட்பட ஏனைய தரப்பினரையும் தயார்ப்படுத்தும் வகையிலும் நிகழ்ச்சிகளை நடாத்துமாறு கிழக்கு மாகாண ஆளுநரினால் திருகோண மலை மாவட்ட செயலகத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்களுடனான கலந்துரையாடலின் போது அறிவுறுத்தியமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இந்நிகழ்வில் திருகோணமலை மேலதிக அரசாங்க அதிபர் ஜே எஸ்.அருள்ராஜ்,அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ், திருகோணமலை வடக்கு வலயக்கல்வி பணிமனையின் வலயக்கல்வி பணிப்பாளர், கோமரன்கடவல உதவி பிரதேச செயலாளர், மாவட்ட , மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உத்தியோகத்தர்கள் , பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# கேம்பிறிட்ச் சர்வதேச பாடசாலையின் ஒன்று கூடல் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்











(ஹஸ்பர், அ . அச்சுதன்)

திருகோணமலையில் அமைந்துள்ள கேம்பிறிட்ச் சர்வதேச பாடசாலையின் 2023 / 2024 ஆம் ஆண்டுக்கான ஒன்று கூடல் நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நேற்று சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியின் மண்டபத்தில் கேம்பிறிட்ச் சர்வதேச பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம் பெற்றதது.

நிகழ்வின் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் சட்டத்தரணி அஜித் ரோகன கலந்து கொண்டார்.


கௌரவ அதிதிகளாக முன்னால் ஜோர்தான் நாட்டுக்கான இலங்கை தூதுவர் சட்டத்தரணி ஏ.எல். எம்.லாபிர், திருகோணமலை கடற்படை கடற்படை கல்லூரியின் கொமான்டர் கொரா ரதோர்வும் ,

சிறப்பு அதிதிகளாக திருகோணமலை பொது வைத்திய சாலையின் சிரேஸ்ட வைத்திய அதிகாரி இளங்கோவன் செந்தூரனும் ,வணக்கத்துக்குரிய எஸ்.டபிள்யூ தேவகுமார் அவர்கலும் நிலாவெளி வைத்திய சாலையின் வைத்தியர் மேகலா அருன்மாறன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

ஆரம்ப நிகழ்வாக அதிதிகள் வரவேற்கப்படுவதையும் , மாணவர்களின் கலை நிகழ்வுகளையும் மாணவர்களுக்கான சான்றிதழ் , நினைவுச் சின்னங்கள் அதிதிகளால் வழங்கப் படுவதையும் கலந்து சிறப்பித்தவர்களையும் காணலாம்.

# இலங்கையின் சிரேஷ்ட பிரஜை வன்சபால நாரசிங்க அவுஸ்திரேலிய மாஸ்டர் விளையாட்டுப் போட்டியில் சர்வதேச சாதனை







(அஸ்ஹர் இப்றாஹிம்)

அவுஸ்திரேலியாவில் இடம்பெற்ற 80 வயதிற்கும் 90 வயதிற்கும் இடைப்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கிடையிலான 19 வது அவுஸ்திரேலிய மாஸ்டர் விளையாட்டுப் போட்டியில் கண்டியைச்சேர்ந்த வன்சபால நாரசிங்க இரண்டு தங்கம்,இரண்டு வெள்ளி வென்று சாதனை படைத்துள்ளார்.

5000 மீற்றர் ஓட்டம்,2000 மீற்றர் தடைதாண்டல் ஓட்டம் ( steeplechase) ஆகியவற்றில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கங்களையும், 800 மீற்றர் ஓட்டம்,1500 மீற்றர் ஓட்டம் என்பனவற்றில் இரண்டாம் இடங்களைப் பெற்று வெள்ளிப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டார்.

# இலங்கை சிரேஷ்ட தாதி உத்தியோஸ்ர் அருணி பிலிப்பைன்சில் இடம்பெற்ற ஆசிய மாஸ்டர்ஸ் மேய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் சாதனை




(அஸ்ஹர் இப்றாஹிம்)

இலங்கை சுகாதார அமைச்சின் கீழ் சிரேஷ்ட தாதி உத்தியோஸ்தராக கடமை புரியும் அருணி ஜயசூரிய பிலிப்பைன்ஸ் நாட்டில் இடம்பெற்ற ஆசிய மாஸ்டார்ஸ் மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் தங்கம்,வெள்ளி,வெண்கலப் பதக்கங்கள் வென்றுள்ளார்.

பெண்களுக்கான மைதான நிகழ்வுகளாக உயரம் பாய்தல்,நீளம் பாய்தல் மற்றும் முப்பாய்ச்சல் நிகழ்வுகளில் முதலிடங்களைப் பெற்று தங்கப்பதக்கங்களையும், சுவட்டு நிகழ்வான பெண்களுக்கான 4து100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்று வெண்கலப்பதக்கத்தையும், 4x400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக் கொண்டார்.



## சொல்லத் துடிக்குது மனசு: 17

# மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து வழக்கொழிந்து போன சிறுதெய்வ வழிபாடுகள்

*மட்டக்களப்பாரின் பண்பாடு
பாரம்பரியம் எடுத்தியம்பி
வழக்கொழிந்து போன வழிபாடுகளும்
உளதென்போம்*

மனிதன் நிலையான வாழ்க்கை வாழ ஆரம்பித்தது முதல் அவர்களிடத்தில் சுயதெய்வ வழிபாடுகளும் தோற்றம் பெற்றன. அப்போது தோன்றிய வழிபாடுகள் பல்லவர் காலத்தில் இருந்து அரச ஆதரவுடன் பக்தி இயக்கங்களின் செல்வாக்குக் காரணமாகவும் காலத்துக்குக் காலம் வளர்ச்சியடைந்து பல மாற்றங்களைத் தன்னகத்தே புகுத்தி மேலும் வளர்ச்சி அடைய ஆரம்பித்தன. ஆகமமயப்படுத்தலின் காரணமாக வழிபாடுகளில் புதிய உத்வேகம் பெற ஆரம்பித்தன. பிற்காலத்தில் வழிபாட்டு முறைகளைப் பெருந் தெய்வ வழிபாடு, சிறு தெய்வ வழிபாடு என இரண்டாகப் பிரிக்கலாயினர். பெரும்பாலும் கிராமிய மக்கள் சிறுதெய்வ வழிபாட்டினையே மேற்கொண்டு வந்தனர். 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்து கிராமிய வழிபாடுகளில் பின்பற்றப்பட்டு வந்த பல சிறு தெய்வங்களுக்கு ஆகம முறையில் கோயில்கள் அமைக்கப் பெற்றமையால் கோயில்களின் பூசை முறைகளும் ஆகம மயப்படுத்தப்பட்டன. அத்தோடு மனித நாகரிகத்தின் வளர்ச்சிப் போக்கின் தாக்கத்தினால் மக்களிடம் காணப்பட்ட சிறுதெய்வ வழிபாடுகளில் பல வழக்கொழிந்து போயின.

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் பல சிறுதெய்வ வழிபாட்டின் நிலைக்களங்களாக விளங்கின. சில கிராமங்களில் தனித்துவமும் சிறப்பும் மிக்க வகையில் சிறு தெய்வ வழிபாடு இயற்றப்படுவதை இன்றும் காணக் கூடியதாக உள்ளன. அதேபோல் நகரங்களை அண்மித்த கிராமங்கள் சிலவற்றிலும் சிறுதெய்வ வழிபாட்டு முறைகள், மரபுகள், சம்பிரதாயங்கள் மாற்றமுறாத வகையில் வழிபாடுகள் இயற்றப்பட்டு வரவதையும் காணக் கிடைக்கிறது. இந்த வழிபாட்டு முறைகளில் பல வழக்கொழிந்து சென்றிருப்பதனையும் அவதானிக்க முடிகிறது. படையெடுப்புக்கள், நாகரிக மாற்றம், மத ஊடுருவல், மதப் புறக்ககணிப்புக்கள், அரசர்களினதும் ஆட்சியாளர்களினதும் ஆதரவின்மை ஆகியவற்றால் பல சிறு தெய்வ வழிபாடுகள் வழக்கொழிந்து போயின. யக்ஷ வழிபாடு, வதனமார், முன்னடித்தம்பிரான், பேயாண்ட நயினார், குமார தெய்வம், காளமாமுனி, பெரியசாமி, மழுவெட்டியான், கொத்தியார் போன்ற வழிபாடுகளைக் குறிப்பிடலாம். இன்னும் பல வழிபாடுகள் கிராமங்களில் இருந்து வழக்கொழிந்து போயிருக்கலாம் அவை பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை. அத்தொடு பல பரிகலத் (பரிவாரத்) தெய்வங்களும், ஏவல் தெய்வ வழிபாடுகளும் மட்டக்களப்பு வழிபாட்டு மரபில் இருந்து மறைந்துவிட்டன.

மரபு, பாரம்பரியங்களை வெளிப்படுத்தும் சுய தெய்வ வழிபாடு என்ற கட்டுரையில் யக்ஷ வழிபாடு, வதனமார் வழிபாடு, முன்னடித்தம்பிரான் வழிபாடுகள் பற்றிச் சிறிது விளக்கி இருப்பதனால் அவற்றைத் தவிர்த்து மட்டக்களப்பில் வழக்கொழிந்து போன ஏனைய சிறுதெய்வ வழிபாடுகள் சில பற்றியே இக் கட்டுரையில் நோக்கப்படுகின்றன. இது சம்பந்தமான மேலதிக தகவல்களை 'மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு' (க.மகேஸ்வரலிங்கம் -1996), 'மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும்' (க.மகேஸ்வரலிங்கம் -2008), 'மட்டக்களப்புக் குகன்குல முற்குகர் வரலாறும் மரபுகளும்'(ஞா.சிவசண்முகம்-2000), 'மட்டக்களப்பில் இந்த சமய கலாசாரம்) (சைவப் புலவர்.எஸ்.தில்லைநாதன்-2006), 'வெல்லாவெளி வரலாறும் பண்பாடும்' (கவிக்கோ வெல்லவூரக் கோபால்-2012) ஆகிய நூல்களை ஆய்வு செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

குமார தெய்வம் வழிபாடு

குமார தெய்வ வழிபாடு பல தசாப்தங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் இருந்து வழக்கொழிந்துவிட்டன. இது ஓர் ஆண் தெய்வ வழிபாடாகும். பாணமை, பொத்துவில், அக்கரைப்பற்று, தம்பலவத்தை, இராணமடு, சின்னவத்தை, ஊத்துவாடி, அப்பிளாந்துறை, தாளங்குடா, பாலமுனை, பூநொச்சிமுனை, ஊறணி, புல்லுமரை, களுவங்கேணி, திகிலிவட்டை, கதிரவெளி ஆகிய இடங்களில் இவ்வழிபாடு நிலவியதாக அறிய முடிகிறது. இவ்வழிபாடு எங்கிருந்து, எப்போது, யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது என்பது பற்றிய தகவல்களை அறிய முடியவில்லை.கம்பு, கொத்து, இலை, மலர் ஆகிய இயற்கைப் பொருட்களைக் கொண்டு முக்கோண வடிவில் பந்தல் அமைத்துப் பந்தலின் உள்ளே நிலத்தில் வெள்ளைச் சீலை விரித்து மடை வைத்துப் பூசையை ஆரம்பிப்பார்கள். குமார தெய்வம் ஆடுபவர் காலில் சலங்கை கட்டி தலைக்குத் தொப்பி அணிந்து, கையில் கோடாலி அல்லது கருங்காலிப் பெல் கொண்டு தெய்வத்துக்குரிய பாடலைப் பூசாரி பாட, ஒருவர் தவில் அடிக்கத் தாளத்துக்கு ஏற்பத் தெய்வம் ஆடுவார். கட்டும் சொல்லப்படும். இறுதியில் மனித இரத்தம் அல்லது குரங்கின் இரத்தம் பலியாகக் கொடுக்கப்படும். அத்தோடு சடங்கும் நிறைவுறும். வெல்லாவெளி மாரியம்மன் கோயிலில் பல தெய்வங்களில் ஒன்றாகக் குமார தெய்வமும் ஆடியதாக அறிய முடிகிறது. இத்தெய்வத்துக்கு வழிபாடு இயற்றப்படாவிட்டால் காய்ச்சல், இரத்தச் சோகை, வெப்பு ஆகிய நோய்கள் ஏறபடுவதொடு வயலில் விளைச்சல் குறைந்து வீட்டில் நிம்மதி பாதிக்கப்படும் எனவும் நம்பி வழிபாடு இயற்றியதாக அறிய முடிகிறது. இரத்த பலி கொடுத்தல் காரணமாக இவ்வழிபாடு நிறுத்தப்பட்டிருக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

காளமாமுனி வழிபாடு.

இவ்வழிபாடு மட்டக்களப்பு மாவட்டத்துக்கு எங்கிருந்து, எப்போது, யாரால் அறிமுகப்படுத்தப்பட்டது



என்பதை அறிய முடியவில்லை. காளமாமுனியினை வைரவரின் குருவாகக் கொண்டு வழிபட்டனர். இவருக்கெனத் தனியான கோயில் எதுவும் கட்டப்படவில்லை. இவ்வழிபாடு தொடர்பாகத் தனியான காவியம், அகவல், பத்ததி, மந்திரம் எதுவம் இருந்ததாக அறிய முடியவில்லை. இவருக்காகச் சுடலை வைரவர், கால வைரவர் ஆகிய தெங்வங்களுக்குப் பிரயோகிக்கபடும் மந்திரங்கள் பூசாரிமாரால் பயன்படுத்தப்பட்டிருப்பதை அறிய முடிகிறது. பல தசாப்தங்களுக்கு முன்னர் கொக்கட்டிச்சோலை ஏகாம்பரம் புவநேசசிங்கம் குடும்பத்தினர் தாமரைக் குளத்தின் கிழக்குப் புறமாக உள்ள ஆலமரத்தடியில் இவ்வழிபாடு சிறப்பாக மேற்கொண்டமை பற்றி அறிய முடிகிறது. முனைக்காடு மாரியம்மன் கோயிலில் வருடாந்தச் சடங்கின்போது பல சிறு தெய்வங்களுள் காளமாமுனியும் ஒருவராக பந்தல், மடை வைத்து வழிபடப்படுகிறது. தெய்வங்கள் ஆடும்போது கட்டுதல், காய் வெட்டிக் கட்டு அவிழ்த்தல், கட்டுக் கூறல், பில்லி, சூனியம் அகற்றல் ஆகியவற்றுக்குரிய மூல தெய்வமாகப் பூசாரிமார் காளமாமுனிப் பயன்படுத்துகின்றனர். இவ்வழிபாடு மட்டக்களப்பு மாவட்டத்தில் வேறு எங்காவது இருந்தமைக்கான அதாரங்கள் எதுவும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

பேயாண்ட நயினார் வழிபாடு.

தென் இந்தியாவில் சோழ நாட்டின் தொண்டை மண்டலம், இராமநாமபுர மாவட்டம் முதலிய பிரதெசங்களில் பிரபல்யமானவர்களையும் பூசிக்கத்தக்கவர்களையும் நயினார் என அழைப்பது வழக்கம். பேயாண்ட நயினார், தேவ நயினார் இருவரும் சோழ நாட்டில் இருந்து இலங்கைக்கு வந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. இவர்கள் இருவரும் பேய்களையும், யானைகளையும், குழு மாடுகளையும் இடக்கிக் கட்டியமையினால் காரணப் பெயரும், மக்களிடம் மரியாதையும் ஏற்பட்டுப் பின்னர் பூசிப்புக்குரிய தெய்வமாக மாறி இருக்கலாம் எனவும் ஒருசாரார் கருதுகின்றனர். இதனை பேயாண்ட நயினார் காவியத்தில் இருந்தும் அறிந்து கொள்ளலாம்.

பேயாண்ட நயினாரும் தேவ நயினாரும் யாழ்ப்பாணம், வன்னி, அனுராதபுரம், கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் பல வீர, தீர சாகசங்களைப் பரிந்து தெய்வமாகியவர்கள் என நம்புகின்றனர். இதில் பேயாண்ட நயினாருக்கே கூடுதல் மரியாதையும் முக்கியத்துவமும் கொடுத்து வழிபட்டு வந்திருக்கின்றனர். பேயாண்டார் யாழ்ப்பாணத்தில் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து பிள்ளை ஒன்று பிறந்ததாகவும் இறுதிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் தேவ நயினார், மனைவி மக்கள் சுற்றத்தாருடன் வாழ்ந்து தெய்வநிலை அடைந்ததாகவும் நம்பப்படுகிறது. இவர் பேயை அடக்கியும், யானைகளை அடக்கியும், அடக்க முடியாத குழு மாடுகளைப் பிடித்துக் கட்டியும் புரிந்த வீர, தீர தீரசாகசங்களைப் பேயாண்ட நயினார் காவியத்தின் மூலமாகவும் கண்டி மன்னன இரண்டாம் இராசசிங்கன் முன்னிலையில் நடந்த சம்பவம் ஒன்றின் மூலமாகவும் அறியக் கிடக்கிறது.

பட்டியில் உள்ள மாடுகளைப் பேயாண்டார் பாதுகாப்பதாகவும் பட்டியில் இருந்து மாடு காணாமல் போனால் அவருக்கு நேத்தி கட்டினால் மாடுகளைக் கொண்டு வந்து சேர்ப்பார் எனவும் நம்பினர். அத்தோடு பேயாண்டாரை முன்வைத்துப் பட்டியைக் நினைத்துக் காவல் பண்ணிக் கட்டினால் அவர் பட்டியைப் பாதுகாப்பார் எனவும் நம்பினர். சேனைகளில் பரண் அமைத்துப் புது மண் சட்டி ஒன்றின் உட்புறத்தில் பேயாண்டாருக்குரிய அட்சரத்தினைப் பொறித்துக் கவிழ்த்து வைத்தால் சேனையில் எப்போதும் ஆரவாரம் காட்டியும் ஆள் நடமாட்டம் இருப்பதை உணர்த்தியதாக மட்டக்களப்பில் முன்னோர் நம்பி வந்ததாகக் கூறுகின்றனர். மண் சட்டியின் வெளிப்புறத்தில் சுண்ணாம்பினால் முகம் கீறச் சட்டியைக் கலிழ்த்துத் தொங்கவிடும் நடைமுறை சேனைகளில் இப்போதும் பின்பற்றப்படுகிறது. இச்செயல் பேயாண்டாரை முன்னிலைப்படுத்திச் செய்யப்படுகிறது என்பதற்கான ஆதாரங்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. நெல் விழைந்ததும் பதிர் அறுத்து மாலை வேளையில் பேயாண்டாருக்குப் பொங்கல் வைத்து மட்டக்களப்பின் சில இடங்களில் வழிபட்டதாகவும் நம்பப்படுகிறது. இவ்வழிபாடும் மட்டக்களப்பில் முற்றாக அருகிவிட்டதென்றே கூறலாம்.

பெரியசாமி வழிபாடு.

இலங்கையில் பழங்குடி வேடுவ இனத்தவர்களால் வழிபடப்பட்டு வந்த வழிபாடுகளில் பெரியசாமி வழிபாடும் ஒன்றாகும். பாணமை, தாண்டியடி, காஞ சிரங்குடா, கஞ்சிக்குடிச்சாறு, தங்க வேலாயுதபுரம், அலிகம்பை, முறுத்தானை, கதிரவெளி ஆகிய இடங்களில் இவ்வழிபாடு மேற்கொள்ளப்பட்டு வந்தன என்பதை அறிய முடிகிறது. இப்போது பாற்சேனை வேட வேளாளர்களால் கதிரவெளியில் மாத்திரமே வருடா வருடம் வழிபடப்பட்டு வருகின்றது. இவ்வழிபாடு பற்றிய வரலாற்றுத் தகவல்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை. கதிரவெளி சடங்கடிக் குடா என்னும் இடத்தில் வருடா வருடம் சடங்கு நடைபெறுகிறது. சடங்குக்கான பொருட்கள் அடங்கிய பெட்டகம் பால்சேனையில் இருந்து வேட வேளாளர்களால் கதிரவெளி சடங்கடிக் குடாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டுச் சடங்கு நிறைவுற்றதும் அப்பெட்டகம் பாதுகாப்பாகக் கொண்டு வந்து உரிய இடத்தில் வைப்பார்கள். சடங்குக்காகப் படகுபோல் பந்தல் அமைத்து மத்தியில் பாய்மரம் நாட்டி, வெள்ளைச் சீலையில் இருவரின் உருவம் வரைந்து கம்பத்தில் கொடி ஏற்றுவார்கள். இச்சடங்கினை நடத்துவதற்குத் தலைமைக் கப்புகனார், உதவிக் கப்புகனார் என இருவர் செயற்படுவர்கள். பந்தலினுள்ளும், கம்பத்தடியிலும் மடை வைக்கப்பட்டுச் சடங்கு ஆரம்பமாகும். உருக்கொண்டு கப்புகனார்களும், பலரும் படகினைச் சுற்றி மெதுவாகத் தெய்வமாடுவார்கள். இறுதியில் கப்புகனார் இருவரும் கதிரவெளி ஊர்ப்போடியாரிடம் சென்று 'சந்தொசம்' என்று கூறியதும் இருவரும் மயக்கமுற்றுவிடுவார்கள் அத்துடன் சடங்கும் நிறைவடையும்.

பெரிசாமி வழிபாட்டின்போது பலர் பனை ஓலையைக் கையிலெடுத்துத் தெய்வமாடுவார்கள். அவர்கள் அங்கிருந்து மகாவலி கங்கைக் கரை ஓரமாகக் கடலை நோக்கிச் செல்வார்கள். இன்னும் ஒரு சிலர் இறந்த பிதிரர்களாகவும் உருக்கொண்டு தெய்வம் ஆடி உறவினர்களுக்குக் கட்டும் சுறுவர். இவ்வழிபாடு கடலாட்சியம்மன் வழிபாட்டுடன் பல விடயங்களில் ஒத்திருப்பதாகவும் பலர் கூறுகின்றனர். பல தசாப்தங்களுக்கு முன்னர் திருகோணமலை மாவட்டத்தில் மலைமுந்தல் கிராமத்தில் இவ்வழிபாடு இயற்றப்பட்டமையையும் அறிய முடிகிறது. பெரியசாமி வழிபாடு பல அடங்களில் மறைந்து போயிருக்கத் தற்பொழுது கதிரவெளி சடங்கடிக் குடாவில் மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதேபோல் பெரியதம்பிரான், பரமநயினார் வழிபாடும் பல இடங்களில் வழக்கொழிந்து சில இடங்களில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அப்பேயினை அடக்குவதற்காக போன பிற சிறுதெய்வ வழிபாடுகள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் போற்றப்பட்டு வந்த பல பிற தெய்வ வழிபாடுகள் வழக்கொழிந்து விட்டமை பற்றியும் அறிய முடிகிறது. சுங்கான்கேணி புதுவளவு, பாலையடித் தோணா, பேத்தாளை ஆகிய கிராமங்களில் 'மழுவெட்டியான்' என்ற சிறுதெய்வ வழிபாடு நிலவி வந்து காலப் போக்கில் வழக்கொழிந்து சென்றுவிட்டன. மட்டக்களப்புக்குத் தென்பாலுள்ள கொத்தியாபுலைக் (கொத்தியார் புலவாசல்) கிராமத்தில் ஒரு பெரிய நாவல் மரம் நின்றதாகவும் அவ்விடத்தில் அந்தி, சந்தி, இரவு வேளைகளில் பேய் நடமாடிப் பயமுறுத்தியதாகவும் கருதி கொத்தியார் எனும் சிறு



**சின்னத்தம்பி குருபரன்**

தெய்வத்துக்குச் சடங்கு செய்து வழிபட்டமை பற்றியும் அறிய முடிகிறது. அதேபோல் வெல்லாவெளியில் சுவாதி அம்மன் கல்லடி அல்லது நாச்சிமார் அம்மன் கல்லடி என்னுமிடத்தில் வதனமாரின் தாயாரான சுவாதி அம்மனுக்கு வழிபாடு நிகழ்த்தப்பட்டமை பற்றிய கர்ணபரம்பரைக் கதையொன்றுள்ளது. அவ்விடத்தில் பின்னர் வதனமார் வழிபாடு நிகழ்த்தப்பட்டு அதுவும் வழக்கொழிந்து போய்விட்டன. அத்தோடு வெல்லாவெளி பழனியார் வட்டையில் உள்ள அயிரம் விழுது ஆலமரத்தடியில் வழிபடப்பட்டு வந்த சூல வழிபாடு மருவி வைரவர் வழிபாடாக மாற்றம் பெற்றுள்ளன. இவற்றுள் பல சிறுதெய்வ வழிபாடுகள் வித்தகத் திறமைமிக்க பூசாரிமார் இன்மையாலும் வழக்கொழிந்து போனமை பற்றியும் அறிய முடிகிறது.

வழக்கொழிந்து போன வழிபாடுகளில் பல துணைத் தெய்வங்களும், பரிவாரத் தெய்வங்களும், ஏவல் தெய்வங்களும், துஸ்ட தெய்வங்களும் அடங்ககின்றன. வராகி அம்மன், சண்டிமாதெவி, கிங்கிலியான் ஆகிய தெய்வங்கள் வித்தகத் திறமைமிக்க பூசாரிமாரின் மந்திரச் சாகசங்களுக்கு உதவி புரிந்து வந்தமை பற்றியும் பல பூசாரிமார் கூறி இருக்கின்றனர். முன்பு போல் இல்லாமல் ஆகமமயமான கோயில், ஆகமமயமான பூசைகள் காரணமாகவும் பலரிடம் மந்திரம், பில்லி, சூனியம், பேய், பிசாசு என்பன தொடர்பான நம்பிக்கை குறைந்து வருவதனாலும் காலப்போக்கில் இன்னும் சில சிறுதெய்வ வழிபாடுகளும் மறைந்து போவதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. மட்டக்களப்பு இந்து சமயத்தவர்களால் வழிபடப்பட்டு வழக்பொழிந்து போன வழிபாடுகள் பற்றிய மானிடவியல், சமூக, பணடபாட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகின்றன. இவை தொடர்பான ஆய்வுகளைப் பரந்த அடிப்படையில் மேற்கொண்டு ஆவணப்படுத்த வேண்டியதும் காலத்தின் தேவையாகின்றது. இதற்குள் எமது முன்னோரின் சமய. பண்பாட்டு முதுசங்களும் வாழ்க்கை முறைகளும் அடங்கி இருக்கின்றன என்பதும் புரிதலுக்குரியதாகும்.

*மட்டக்களப்பு வாழ் இந்துக்களிடத்தில்
மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு வீரத்தைப்
போற்றி வழிபட்ட சிறுதெய்வ வழிபாடுகளும்
சிறப்புப் பெற்றிருந்தன என்பதும் வரலாறாகும்*

**வீரம் போற்றும் வழிபாடு தொடரும்....**



# சுபீட்சத்தின் தேடலில்

## Dr. ஷப்ரினா பாரிஸ்

இலங்கை, நீர்கொழும்பு, பொறுத்தொட்டவில் பிறந்தார். தந்தை திரு பாரிஸ்; தாயார் திருமதிசகீலா பாரிஸ். தந்தை ஒரு வணிகர். அவர் இலங்கையிலுள்ள சப்ராஸ் ஒப்ரிகல்ஸ் பிரைவேற்லிமிட்டட் மற்றும் மலேசியாவிலுள்ள பிடெலிற்றி சொலியூஷன்ஸ் ஆகிய நிறுவனங்களின்இயக்குநர். பெற்றோர் இருவரும் இரண்டாவது தாயகமாக மலேசியக் குடியுரிமை பெற்றவர்கள். இவர்களது குடும்பம் நீர்கொழும்பு பொறுத்தொட்ட பகுதியில் நன்மதிப்புப் பெற்ற ஒருகுடும்பமாகும். கலாநிதி ஷப்ரினா பாரிஸ் முன்பள்ளிக் கல்வித் துறையில் இளமாணிப் பட்டதாரி. அத்துடன் சான்று பெற்ற மொண்டிசோரியன் கல்வியில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார். குழந்தைகளுக்குக் கற்பித்தல் தொடர்பான கலாநிதி மரியா மொண்டிசோரி அவர்களின் கல்வித்தத்துவங்கள் பற்றிய தெளிந்த அறிவுடன் அவற்றைப் பிரபலப்படுத்த அயராதுழைப்பவர். அத்துடன்அவர் தொழில் ரீதியாக ஆசிரியர்; பயிற்றுநர், குழந்தைகளை நேசிப்பவர். மலேசியாவில்மொண்டிசோரி தத்துவங்களைக் கற்றதுடன் உளவியல், உயர்தர உளவளத்துணை, உளம்சார்குறைபாடுகள் ஆகிய துறைகளில் டிப்ளோமா பட்டம் பெற்றுள்ளார்.

இவர் தற்போது பின்வரும் நிறுவனங்களில் முகாமைத்துவப் பணிப்பாளராக இருக்கிறார்:

மலேசியன் யூனிவர்சல் கல்லூரி, மலேசியன் மொண்டிசோரி இன்டர்நஷனல் இலங்கை.

யுனைட்டட் வேர்ல்ட் காலேஜ், மலேசியன் மொண்டிசோரி இன்டர்நஷனல் பிரைவேற் லிமிட்டட், இலங்கை ஆகியவற்றின் நிறுவுநர்.

குளோரியஸ் ஐகோனிக் வேர்ல்ட் அவோர்டீஸ் இலங்கை, ரோயல் எம்பயர் கிரவுண் பிரைவேற் லிமிட்டட், மலேசியன் இன்டர்நஷனல் பிறிஸ்கூல் பிரைவேற்லிமிட்டட் ஆகியவற்றின் தலைவர்.

### விருதுகள்:

அவரது விசேட துறைகள் மொண்டிசோரி டிப்ளோமா, சிறுவர் உளவியல் ஆகியன. பின்வரும்விருதுகளைப் பெற்றுள்ளார்:

சிறந்த மொண்டிசோரியன் (சர்வதேச விருது)

### தேசபந்து

அதியுயர் மொண்டிசோரி விருது

ஆசிரியர் பயிற்சிக்கான தேசிய விருது (பேச்சாளர் விருது)

நெல்சன் மன்டேலா விருது

கல்வித் தூதுவர்

மேலும் பல கல்விசார் உயர்நிலைகளுக்கான அங்கீகாரங்கள்

### சாதனைகள்:

கலாநிதி ஷப்ரினா அவர்கள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 3000இற்கு மேற்பட்ட ஆசிரியர்களைப்பயிற்றுவித்துள்ளதுடன் தான் விரும்பும் கற்பித்தற் பணியைச் செய்வதற்காக பல நாடுகளுக்கும்பயணித்துள்ளார். அவர் பயணித்துள்ள நாடுகள் மலேசியா, சிங்கப்பூர், ஹொங்கொங், சவூதி, நைஜீரியா, துபாய், பாகிஸ்தான், இந்தியா. வெளிநாட்டுப் பயணங்களை அவர் விரும்புகிறார்.

### வெற்றிகள்:

2021இல் ஒரு சர்வதேச ஆசிரியராகத் தெரிவானார். அதன்மூலம் பாகிஸ்தான் சென்று சுமார்2000 மாணவர்களுக்கு விரிவுரையாற்றும் வாய்ப்பு கிடைத்தது. அம்மாணவர்கள் இன்றுஅனைத்துலக ஆசிரியர்களாக உள்ளனர். அவர்களது கற்பித்தற் பாணி காரணமாக இவருக்குச்சிறந்த பேச்சாளர் விருது கிடைத்தது.

இவர் பல கல்விசார் தொழில் வல்லுநர் அமைப்புகளில் இண்ந்துள்ளார். தற்போது இவர்கொழும்பில் தனது சொந்த நிறுவகத்தையூம் கல்லூரிப் பாடசாலையையும் நடத்தி வருகிறார்.

### அவரது இலக்கு:

அவரது இலக்குகளாவன,

1) சரியான மொண்டிசோரி முறையில் ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல்

2) உள்ளார்ந்த சமாதானத்தை அடையத்தக்கதாகப் பிள்ளைகளுக்குக் கற்பித்தல்

3) அமைதியின்தூதுவர்களாக உருவாகும் வண்ணம் பிள்ளைகளின் முழுமையான விருத்தியைக் கண்காணித்தல்.

மேலும் பல துறைகளிலும் இவர் ஈடுபாடு கொண்டுள்ளார். அழகு மற்றும் மெகாந்தி கலை, கல்விப்பட்டப் படிப்பு - உயர் தேசிய டிப்ளோமா.

### மணவாழ்வு குழந்தைகள்:

அற்புதமான அன்பான கணவரை மணந்துள்ளார். பஸ்லான் முகமட் எனும் அவர் மலேசியயூனிவர்சல், இலங்கை நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி. அத்துடன் பூட்பாங்க்பிரைவேற், இலங்கை நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர். இவரது வெற்றிப் பயணத்தின்ஒவ்வொரு பகுதியிலும் கணவர் உதவியாகவுள்ளார். இவர்களுக்கு இசை அகமட் எனும் அழகியமகன் இருக்கிறார். அவர் ஆரம்பக் கல்வியை இலங்கை கேற்வே கல்லூரியில் கற்றபின் தற்போதுமலேசியாவில் ஒஸ்ரின் ஹைற்ஸ் சர்வதேச பாடசாலையில் கற்கிறார். இவர்களுக்கு வயதானஒரு பெண் குழந்தை ஒன்றும் உள்ளது.

### கனவு:

வருங்காலத்தில் தன் மகள் இந்த கல்வி முறைமையைப் பரப்புகிறவராக விளங்க வேண்டும் என்பதே இவரது விருப்பமாகும்.














# அம்பிட்டிய தேரர் உள்ளிட்ட 4 பேருக்கு பிணை; இருவருக்கு பிடிவிறாந்து

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பில் ஜனாதிபதி வருகையின் போது எதிர்ப்பு தெரிவித்து வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அம்பிட்டிய சுமணரட்ண தேரர் உட்பட 4 பேரையும் இருவர் ஆள்பிணையில் செல்ல மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர்போல் நேற்று திங்கட்கிழமை (27) அனுமதியளித்து நீதிமன்றிற்கு சமூகமளிக்காத 2 பேருக்கும் பிடிவிறாந்து உத்தரவிட்டு அடுத்தவருடம் மாச் 18 வழக்கை தவனையிட்டு ஒத்திவைத்தார்.

கடந்த ஒக்டோபர் 7ம் திகதி ஜனாதிபதி மட்டக்களப்பு சாந்தா புனித மிக்கேல் ஆண்கள் தேசிய பாடசாலை 150 வருட நிறைவு விழாவின் நிகழ்வுகளில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு வருகை தந்துள்ளார்.

கடந்த ஒக்டோபர் 7ம் ஜனாதிபதியின் மட்டக்களப்பு வருகையை எதிர்த்து தேரர் உட்டபட குழுவினர் ஆர்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அவர்களுக்கு நீதிமன்ற கட்டளை ஒன்றை பொலிசார் கேரியிருந்த நிலையில் நீதிமன்றம் வீதிகளை மறித்து பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்காமல் ஆர்பாட்டத்தில் ஈடுபடுவதற்கு அனுமதித்ததுடன் அதனை மீறி வீதியை மறித்து பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டால் போக்குவரத்து விதிமுறையின் கீழ் அவர்களுக் எதிராக பொலிசார் சட்ட நடவடிக்கை எடுக்கவும் என நீதிமன்றம் கட்டளை வழங்கியது

இந்த நிலையில் ஜனாதிபதி மிக்கேல் கல்லூரிக்கு வருகை தந்திருந்த போது அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து மட்டு விகாராதிபதி அம்பிட்டிய சுமணரட்ண தேரர் தலைமையிலான மேச்சல் தரை மயிலத்தமடு மாதவனை சட்டவிரோத குடியேற்றவாசிகள் கொண்ட குழுவினர் கல்லூரிக்கு உட்புகுவதற்கு முயற்சித்த போது அவர்களை பொலிசார் வீதிதடைகளை ஏற்படுத்தி தடுத்து நிறுத்தியதுடன் நீதிமன்ற கட்டளையை தெரிவித்த நிலையில் அதனை மீறி வீதியை மறித்து அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதில் நீதிமன்ற கட்டளையை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அம்பிட்டிய சுமணரட்ண தேரர், உட்பட இரு தேரர்கள் மற்றும் 6 பேருக்கு எதிராக மட்டு தலைமையக பொலிசார் மட்டக்களப்பு நீதவான் நீதின்றில் வழக்கு தாக்குதல் செய்தனர்.

இந்த வழக்கு மட்டு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட போது நீதிமன்றில் ஆஜரான அம்பிட்டய தேரர் உள்ளிட்ட 6 பேரையும் இரு சரீரப் பிணையில் செல்ல அனுமதியளித்ததுடன் பொலிஸ் நிலையத்துக்கு சென்று வாக்கு மூலத்தை பதிவு செய்யுமாறும் நீதிமன்றிற்கு சமூகமளிக்காத இருவரையுக்கு பிடியானை பிறப்பித்து எதிர்வரும் மாச் மாதம் 18ம் திகதி வழக்கை பிற்போட்டார்.

# கோடிகாமத்தில் மாவீரர்களின் உறவுகளுக்கு மதிப்பளிப்பு.




(த.சுபேசன்)

கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் முன்பாக 26/11 ஞாயிற்றுக்கிழமை மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உரித்துடையவர்களுக்கு மதிப்பளிக்கப்பட்டதுடன் - மாவீரர்களுக்கு அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

மேற்படி மதிப்பளிப்பு நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், முன்னாள் போராளிகள், சமூக சேவகர்கள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தென்மராட்சியைச் சேர்ந்த 25 மாவீரர்களின் உறவுகளுக்கு மதிப்பளிக்கப்பட்டதுடன் - மாவீரர்களின் ஞாபகார்த்தமாக தென்னை மரக் கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

# மண்முனை தென் எருவில்பற்றில் உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான விற்பனையும், கண்காட்சியும்!!




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்துடன் இணைந்து சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவானது ஏற்பாடு செய்த உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான விற்பனை மற்றும் கண்காட்சி நேற்றைய தினம்

(27.11.2023) பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில், சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவு உத்தியோகத்தர்களின் ஒழுங்கமைப்பில் பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

குறித்த விற்பனை மற்றும் கண்காட்சி நிகழ்வின் போது பிரதேச செயலக பிரிவின் உள்ளூர் உற்பத்தியாளர்களால் உற்பத்தியாளர்களால் செய்யப்பட்ட பொருட்கள் (தைத்த ஆடைகள், உள்ளூர் மரக்கறிகள், உணவு வகைகள், மரக்கன்றுகள், பாதணிகள், கைப்பணிப்பொருட்கள், மரத்தினாலான கைவினை பொருட்கள், பனையோலை பொருட்கள், கைத்தறி) காட்சிப்படுத்தப்பட்டிருந்ததுடன், உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வாய்ப்பும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், கணக்காளர் விக்னராஜா, நிருவாக உத்தியோகத்தர் வே.தவேந்திரன், பிரதேச செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு பொருட்களை கொள்வனவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மருதமுனை அல்- மினன் வித்யாலயத்தில் விளையாட்டு விழா




(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட மருதமுனை அல்- மினன் பாடசாலை முன்பள்ளி மாணவர்களின் வருட இறுதி விளையாட்டு விழா பாடசாலையின் அதிபர் திருமதி எஸ்.எச். எஸ்.ஹார்ஜத்து தலைமையில் பாடசாலை உள்ளக மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு கல்முனை மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் சிக்னல் அரிசி ஆலைய நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் சமூக சேவையாளருமான எம்.எஸ்.எம். ஹாரிஸ் (நவாஸ்) பிரதம அதிதியாக கலந்து கொண்டு விளையாட்டு விழாவினை ஆரம்பித்து வைத்தார். கௌரவ அதிதியாக இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியலாளரும் மருதமுனை மஸ்ஜிதுல் மினன் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைவருமான எம்.எஸ் எம் பாஸில் கலந்து கொண்டதுடன் பாடசாலையின் அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு செயலாளர் ஆசிரியர் இசெட்.எம்.றியாஸ், அதிபர் சேவை போட்டி பரீட்சைக்கு தெரிவு செய்யப்பட்டிருந்த அதிபர் நிஹால் சாலி, பாடசாலையின் பழைய மாணவரும் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்திமான ஏ.எல்.எம் ஷினாஸ் உட்பட மாணவர்களின் பெற்றோர்கள், நலன் விரும்பிகள் என பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்

மாணவர்களின் உடற்பயிற்சி கண்காட்சி, எண் கணித பயிற்சி போட்டி உட்பட பாரம்பரிய கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை வெளிப்படுத்தும் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகள் இடம் பெற்றன. மாணவர்களின் வினோத உடை கண்காட்சி பலரது பாராட்டையும் பெற்றிருந்தது.

விளையாட்டு விழா நிகழ்வின் இறுதியில் மாணவர்களுக்கு பதக்கம் அணிவிக்கப்பட்டு புத்தகப்பை அன்பளிப்பாக வழங்கப்பட்டதுடன் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.

# பொருளாதார நெருக்கடியால் ஒரு குடும்பம் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றுள்ளது



( வாஸ் கூஞ்ஞ)

குடும்ப பொருளாதார நெருக்கடியால் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாக பாக்குநீர் ஊடாகச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் திங்கள் கிழமை (27) இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக ஆரம்ப விசாரனையில் தெரிய வருவதாவது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரே குடும்பத்தைச்சார்ந்த ஏழு நபர்கள் ஒரு படகின் மூலம் ஞாயிற்றுக்கிழமை (26) இரவு 8 மணிக்கு மன்னார் கடலூடாகச் சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணம் சுழிப்புரத்தைச் சார்ந்த நாகராசா (43) , வனிந்தினி (38) , அஜந்தன் (18) , கிசாளினி (17) , அனோஜன் (13) , கஜீவன் (09) மற்றும் தனுசிக்கா (04) ஆகியோரே சென்றுள்ளனர்.

இவர்கள் தனுஷ்கோடி பாலத்துக்கு அருகாமையிலேயே இருந்து பாதுகாப்பு அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் , இவர்கள் சென்ற படகுக்கு ஒரு இலட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபா வழங்கியே தாங்கள் வந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடியால் வாழ முடியாத நிலையாலேயே தாங்கள் வந்ததாக தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்டுகின்றது.

# மட்டு முயற்சியாண்மை - 2023 பிரதேச மட்ட விற்பனை கண்காட்சி




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'மட்டு முயற்சியாண்மை - 2023' உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான பிரதேச மட்ட விற்பனைக் கண்காட்சியானது நேற்று (27) பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தலைமையில் பிரதேச செயலகத்தின் முன்பாக இடம் பெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளரினால் சிறுதொழில் முயற்சியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு பெறுமதி சேர் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான ஆலோசனைகள், மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிறு தொழில் முயற்சியாளர்களினால் கூடாரங்களில் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததோடு, இக் கண்காட்சியில் கலந்து கொண்டோரினால் பெருமளவான உற்பத்திப் பொருட்ளை கொள்வனவு செய்வதில் ஆர்வம் செலுத்தியமையை காணக்கூடியதாக இருந்தது.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர்களான சியாஹுல்ஹக், திருமதி.பிரசந்தன் லக்சண்யா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர்களான திருமதி கணேசமூர்த்தி ஜெயராஜினி மற்றும் திருமதி சி.பிரணவசோதி, மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களான தே.கிருஷ்ணவேணி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மன்னார் மாவட்டத்தில் முதன்முதலாக நீதிபதி

( வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தில் முதலாவது சட்டத்தரனியாக நியமனம் பெற இருக்கும் கௌரவ அரியரட்ணம் வில்பிரட் அர்ஜுன் அவர்களுக்கு பல பாகங்களிலிருந்தும் அமோக வாழ்த்துக்கள் குவிந்த வண்ணம் காணப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த கௌரவ அரியரட்ணம் வில்பிரட் அர்ஜுன் அவர்கள் மன்னார் மாவட்டத்தின் முதலாவது நீதிபதியாக எதிர்வரும் 01.12.2023 தொடக்கம் இலங்கையின் நீதிச்சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படவுள்ளார்.

மன்னார் நகரத்தில் வசித்து வரும் இவர் அமரர்களான திரு திருமதி அரியரட்ணம் ஜெசி ஆகியோரின் புத்திரரும் மன்னாரில் மிகவும் பிரபலயமான அமரர் சட்டத்தரனி ஜெயராஜா அவர்களின் பேரனுமாவார்.

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் பழைய மாணவரான இவர் அன்றும் இன்றும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கி வருகின்றார். இவருடைய பேரனார் தொடக்கம் இவர் வரை இவருடைய குடும்பங்கள் பொதுநல பணிகளில் மிகவும் சிறந்து விளங்கியது மன்னாரில் யாவரும் அறிந்தவையே.

கௌரவ அரியரட்ணம் வில்பிரட் அர்ஜுன் அவர்கள் நீண்டகாலமாக மன்னார் பிரஜைகள் குழுவில் இணைந்து கொண்டு பல பொது பணியில் ஈடுபட்டு வந்தவர்.

வீணாக மக்கள் பிரச்சனைகளுக்கு உள்ளாகாது இருக்கும் நோக்குடன் தன்னை நாடி வரும் மக்களாக இருக்கலாம் அல்லது எதாவது கூட்டங்களாக இருக்கலாம் சட்டத் திட்டங்களை மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவு படுத்துவதையும் காணக்கூடியதாக இருந்தது.

தற்பொழுது மன்னாரில் முதன்முதலாக ஒரு இளம் சட்டத்தரனி நியமனம் பெற்றிருப்பது இவருக்கு மன்னார் மக்கள் மற்றும் அமைப்புக்கள் பல பாராட்டுக்களை குவித்து வருகின்றனர்.








சுபீட்சம்
மின்னிதழை
பார்வையிட
www.supeedsam.com


MALAYSIAN UNIVERSAL COLLEGE
Proudly Present
MALAYSIAN UNIVERSAL COLLEGE
4 STYLE
BRIDAL DRESSING
ONE DAY
WORK SHOP
2024
11TH YEAR ANNIVERSARY PROMOTION
Western Bridal Look
Special Guest & Model of the workshop
Roshalie Jayawardane
Actres / Model
Muslim Bridal Look
Special Guest & Model of the workshop
Ishanka Abeysekara
Actres / Model
Hindu Bridal Look
Special Guest & Model of the workshop
Sachini Roy
Actres / Model
Kandyan Bridal Look
Special Guest & Model of the workshop
Viana Fernando
Actres / Model
Senior Trainer
Inosha Sandamali
(NVQ 4,5,6) Qualified
Tamil & Sinhala
Fees
RS 3000
Two International certificate will be awarded
At the End motivational speech About the tips
Business Ideas shared for Makeup look
Four Makeup look
13TH JANUARY 2024
10.00 am to 04.30pm
At BMICH Hall
SAFRAS OPTICALS
ZARA BRIDALS
TRUE LANKA
FOOD BANK
Contact us
+94 72 353 8773
+94 77 085 7994